DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | **1007/2023** |
| Witness: | **அ.சா.1** |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | சையத் அம்ஜத் |
| **Father' Name** | ~ | சையத் மொய்தீன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 29.05.2025.**

**முதல் விசாரணை**

நான் அனங்காபுத்தூர் பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் வணிக கப்பலில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 28.1.2019 அன்று எனது இளைய மகள் ஆலியா தாஸின் என்பவர் நந்தனத்தில் உள்ள ஜஸ்டிஸ் பாத்திமா பஷீர் மெட்ரிக் பள்ளியில் விடுவதற்காக எனக்கு சொந்தமான TN 06 E6181 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் எனது மகளை பின்னால் அமர வைத்துக் கொண்டு காலை 7.50 மணிக்கு நல்லதம்பி ரோடு பம்மலில் மேற்கிலிருந்து கிழக்கில் பல்லாவரம் நோக்கி ஓட்டி சென்று கொண்டிருந்து போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் இடிக்காமல் இருக்க எனது வண்டியை கண்ட்ரோல் செய்த போது எனது இடது பக்கத்தில் வந்த மினி பேருந்து என் வாகனத்தின் மீது இடித்தது போல் தோன்றியது. அதன் பின்னர் நான் மயக்கம் அடைந்து விட்டேன். நான் கண்விழித்து பார்த்தபோது பின்னால் அமர்ந்திருந்த எனது மகளின் தலை மீது

மினி பேருந்தின் பின்சக்கரம் ஏறி இறங்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். அதன் பின்னிட்டு நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகார் மனு அ.சா.ஆ.1. மேற்படி விபத்து ஏற்படுத்திய மினி பேருந்தின் பதிவு எண் மற்றும் அதன் ஓட்டுநரின் அடையாளம் தெரியுமா என்றால் நான் அதனை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எனது மகளை பள்ளிக்கு அழைத்து செல்லும்போது விபத்து ஏற்பட்டதா என்றால் ஆம். எத்தனை மணிக்கு எந்த தேதியில் விபத்து ஏற்பட்டது என்றால் 28.1.2019 அன்று 7.50 மணி அளவில் விபத்து ஏற்பட்டது. எந்த சாலையில் விபத்து ஏற்பட்டது என்றால் பம்மல் நல்லதம்பி சாலையில் விபத்து ஏற்பட்டது. எந்த இடத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் ப்யூட்டி பார்லர் மற்றும் சப்பாத்தி கடை அருகில் விபத்து ஏற்பட்டது. விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்து எவ்வளவு தொலையில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் 2 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. மேற்படி மினி பேருந்தை வலது புறத்தில் முந்தி செல்லும் போது நான் கீழே விழுந்து விட்டேன் என்றால் ஆம். நான் கீழே விழுந்ததன் காரணம் பேருந்த கிடையாது என்றால் சரியல்ல. பேருந்து இடித்ததால் தான் விழுந்தேன்.

பேருந்தின் எந்த பக்கத்தில் இடித்து கீழே விழுந்தேன் என்றால் முன்பக்கத்தில்இடித்து விழுந்தேன். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் எந்த விபத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவில் பேருந்தை முந்தி செல்லும் போது நானே கீழே விழுந்து விட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாகனத்தை நெருங்கிய போது பேருந்து உரசியதால் கீழே விழுந்து விட்டேன். வண்டி கீழே விழுந்த உடன் நானும் எனது மகளும் கீழே விழுந்து விட்டோம் என்றால் சரிதான். நான் கீழே விழுந்தவுடன் எவ்வளவு துாரம் பல்டி அடித்தேன் என்றால் 5 அடி வரை இழுத்து செல்லப்பட்டேன்.

அதன் பின்னிட்டு நான் எழுந்து பார்த்த போது என் மகள் இறந்த நிலையில் இருந்தாள். வழக்கு விபத்தில் இறந்த நபர் என் மகள் என்பதால் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் கீழே விழுந்ததால் தான் இறந்தாள். என்றாலும் பேருந்தினால் எந்த விபத்தும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பேருந்து எனது மகளின் தலையில் ஏறியது. மேற்படி பேருந்து எனது மகளின் தலையில் ஏறியதை நான் பார்த்தேனா என்றால் நான் அப்போது கீழே விழுந்து கிடந்தேன். அதனால் பேருந்து ஏறியதை நான் பார்க்கவில்லை. இவ்வழக்கு விபத்து பேருந்து ஏறி ஏற்படவில்லை என்றாலும் என் மகள் வண்டியில் இருந்து தவறி விழுந்து இறந்து விட்டாள் என்றால் சரியல்ல. நான் மோட்டார் வாகன விதிகளை மீறி

இரு சக்கவர வாகனத்தில் பேருந்தை முந்தி செல்ல முயன்றதால் எனது மகள் கீழே விழுந்து விட்டாள் என்றால் சரியல்ல.

விபத்து நடைபெற்ற சாலையானது ஒரே நேரத்தில் 2 மினி பேருந்துகள் எதிர் எதிரே செல்லும் அகலத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலையானது பூந்தமல்லி, மாங்காடு, குன்றத்தூர், தாம்பரம் செல்வதற்கு ஒரே சாலை என்றால் சரிதான். எனது மகளின் பள்ளி எத்தனை மணிக்கு செயல்படும் என்றால் 9 மணி. அனங்காபுத்தூரில் இருந்து தேனாம்பேட்டையில் உள்ள எனது மகளின் பள்ளிக்கு காரில் சென்றால் 1 1/2 மணி நேரம் ஆகுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மகளை பல்லாவரத்தில் பேருந்து ஏற்றுவதற்காக சென்றேன். அனங்காபுத்தூரில் இருந்து தேனாம்பேட்டை 30 கி.மீ என்றால் எனக்கு தெரியாது. நான் அவசரமாக சென்றதால்தான் மேற்படி இருசக்கர வாகனத்தில் இருந்து என் மகள் கீழே விழுந்து இறந்து விட்டாள் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து நடைபெற்ற தினத்தில் என் மகள் அவள் பள்ளி பிராஜக்ட்டினை செய்து கொண்டு இருசக்கர வாகனத்தில் பிடித்துக் கொண்டு சென்றாள் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி விபத்து ஏற்பட்ட சாலையில் 25 கி.மீ. வேகத்தில் தான் வாகனங்கள் செல்ல முடியும் என்றால் சரியல்ல. வேகமாக செல்லலாம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.